என்னைப் பொறுத்தவரையில் அதை ஆட்சேபிப்பதற்கில்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் நிர்வாகச் சீரமைப்பு எங்கு எழுகிற தென்றால், கீழ்மட்டத்திலிருக்கிற அதிகாரிகளிடம்தான் நிர்வாகச்சீர்கேடு ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசு அறிந்திருக்கும். மிகவும் அதிருப்தி யடைந்திருக்கிற போலிஸ்காரர்களுக்கு இந்த அரசு பரிசிலனைசெய்து நல்ல முறையில் ஏற்பாடுகள் செய்திருந்தால் இந்த இலாகா நல்லமுறையில் செயல்பட அது தேவைப்படும், வசதியாகயிருந்திருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதற்குப் பதிலாக மேல் மட்டத்திலிருக்கின்ற ஒரு சில அதிகாரிகளுக்கு இந்த உத்யோக உயர்வு போன்ற சலுகைகள் வழங்குவதி னால், அரசுக்கு அதிகச் செலவு தான் ஏற்படுமே தவிர, இந்த இலாகாவில் இதனால் அதிருப்தி தான் ஏற்படுமே தவிர, நல்லதாக அமையாது. சீர்கேடு அடைவதாகத்தான் இருக்கிறது என்பதை கூறிக்கொள்கிறேன். இந்த மசோதா வருவதற்கு முன்னால் அவசரச்சட்டமாக இங்கே அரசு கொண்டு வந்திருக்கிறது. இந்த அவசரச்சட்டம் கொண்டு வந்ததின் பின்னால் இந்த மாநிலத்தில் சென்ற சில வாரங்களாக நடைபெற்ற போராட்டங்களையும், அதனால் போலீஸ் நிர்வாகத்தில் ஏற்பட்ட சீர் கேட்டையும் இந்த நாடு நன்றாக கண்டிருக்கிறது. ஆகவே உண்மையில் இது வரவேற்கத் தக்கதல்ல. இந்த மசோதா தேவையற்றது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன் இது தேவையில்லை என்பதோடு, இப்படிப் பட்ட உயர் போலீஸ் அதிகாரிகளின் பதவி உயர்வை கீழ்மட்டத்திலுள்ள போலீஸார் எவரும் விரும்பவில்லை என்று நினைக்கிறேன். யாருக்கும் தேவையில்லை என்ற முறையில் இது பொருத்தமற்ற சட்டமாக இருக்கிறது. ஆகவே இந்த மசோதா தேவையற்றது. என்பதைக் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

(6) அறிவிப்புகள்.

(ஆ) பேரவையின் அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (7—11—1979) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுகளின்படி, பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

8—11—1979 வியாழன்—அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீது மேலும் விவாதம்.